நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : தொடக்கநிலை

## Level : Basic

***November 2009***

வினாக்கள் : 40

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியர் வாசிப்பதற்கான நேரம் : 15 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- முழு வினாத்தாளும் முதல் 15 நிமிடங்களில் **மட்டுமே** வாசிக்கப்பட வேண்டும்.
- வாசித்த பின்னர் வேறு உதவிகள் வழங்கப்படக் கூடாது.
- வாசிக்கப்படும் நேரத்தில் மாணவர்கள் வினாத்தாளிலோ அல்லது விடைத்தாளிலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது.

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.

1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவு செய்க.



1. இந்தச் சிறுமி

(a) உடை அணிகிறாள்.

(b) முகம் கழுவுகிறாள்.

(c) தேனீர் அருந்துகிறாள்.

(d) சாப்பிடுகிறாள்.




2. இந்தச் சிறுவன்

(a) படம் வரைகிறான்.

(b) ஓடுகிறான்.

(c) புத்தகம் படிக்கிறான்.

(d) கடவுளை வணங்குகிறான்.



3. இந்தச் சிறுவன்

(a) விளையாடுகிறான்

(b) நித்திரை செய்கிறான்.

(c) பாடசாலைக்குச் செல்கிறான்.

(d) பாடம் படிக்கிறான்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

Read and understand the Poem “வீடு” and answer the questions 4 to 7.
“வீடு” என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.



**வீடு**

**நல்ல நல்ல வீடு**
**நாங்கள் வாழும் வீடு**
**கல்லும் மண்ணும் சாந்தும்**
**கலந்து கட்டிய வீடு**

**நல்ல யன்னல் ஊடே**
**மெல்லக் காற்று வீசும்**
**கொட்டும் மழையில் எம்மைக்**
**காக்கும் எங்கள் வீடு**

| | |
|---|---|
| 4. பாடலில் யாருடைய வீட்டைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது?<br>(a) நண்பனின்<br>(b) எங்களின்<br>(c) அவர்களின்<br>(d) எல்லோரின் | 5. வீடு எவற்றால் கட்டப்பட்டுள்ளது?<br>(a) மரத்தினால்<br>(b) கல்லும் மண்ணும் சாந்தும்<br>(c) இரும்பினால்<br>(d) தகரத்தினால் |
| 6. காற்று எப்படி வீட்டிற்குள் வருகிறது?<br>(a) சுவரின் ஊடாக<br>(b) யன்னலின் ஊடாக<br>(c) கூரையின் ஊடாக<br>(d) கல்லின் ஊடாக | 7. வீடு எம்மை எதிலிருந்து காக்கிறது?<br>(a) பகைவரிடமிருந்து<br>(b) மழையில் இருந்து<br>(c) காற்றில் இருந்து<br>(d) கள்வரிடமிருந்து |

For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.
8 ஆம், 9ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.

8. அம்மாவும் அப்பாவும் வெலியே சென்றார்கள்.

(a) அப்பாவும்

(b) வெலியே

(c) சென்றார்கள்

(d) அம்மாவும்

9. அழகான விடு கட்டி விளையாடினோம்.

(a) கட்டி

(b) விடு

(c) அழகான

(d) விளையாடினோம்

For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.
10ஆம், 11ஆம் கேள்விகளில் பிழையான ஒரு சொல் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?

10. அண்ணா என் புத்தகம் **<u>அலகான</u>** புத்தகம்.

(a) அளகான

(b) அழகான

(c) அழுகின

(d) ஆழமான

11. மாலா நித்திரை விட்டு **<u>எலும்பு</u>**.

(a) எழும்பு

(b) எறும்பு

(c) எளும்பு

(d) எருப்பு

Look at the pictures carefully and choose the most approprate answer to the questions 12 to 15.

படங்களைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.



12. இந்தப் படத்தில் காணப்படும் சிறுவன்:

(a) விளையாடுகிறான்

(b) முகம் கழுவுகிறான்

(c) குளிக்கிறான்

(d) உணவு உண்கிறான்



13. இப்படத்தில் சிறுவர்கள்:

(a) பந்து அடித்து விளையாடுகிறார்கள்.

(b) ஓடி விளையாடுகிறார்கள்.

(c) படிக்கிறார்கள்.

(d) நடக்கிறார்கள்.



14. இந்தப் படத்தில் ஒரு மனிதர்:

(a) வேலை செய்து கொண்டிருக்கிறார்.

(b) படிகளில் இறங்கும் போது விழுந்துவிட்டார்.

(c) ஓடி விளையாடுகிறார்.

(d) பாடிக் கொண்டிருக்கிறார்.



15. இப்படத்தில் சிறுமி:

(a) ஓடி விளையாடுகிறாள்.

(b) கதிரையின் மேல் ஏறி நிற்கிறாள்.

(c) படித்துக் கொண்டிருக்கிறாள்.

(d) நடனம் ஆடுகிறாள்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 16 to 21 choose the best answer.
16 முதல் 21 வரையுள்ள வினாக்களில் ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

16. அம்மா நான் தண்ணீர் எடுத்து ______________________________

(a) வருகின்றன.
(b) வருகிறேன்.
(c) வருவான்.
(d) வருவார்கள்.

17. நாங்கள் உணவு ______________________________

(a) சாப்பிடுகிறேன்.
(b) சாப்பிடுவான்.
(c) சாப்பிடுவோம்.
(d) சாப்பிடுவார்கள்.

18. தாத்தா எங்களுடன் வந்து ______________________________

(a) இருங்கள்.
(b) இருப்போம்.
(c) இருக்கிறேன்.
(d) இருப்பான்.

19. நான் நித்திரை விட்டு ______________________________

(a) ஓடினேன்.
(b) எழுந்தேன்.
(c) நடந்தேன்.
(d) இருந்தேன்.

20. அக்கா பூக்களை எடுத்து ______________________________

(a) வருகிறார்.
(b) ஓடுகிறார்.
(c) எழுதுகிறார்.
(d) படிக்கிறார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

21. நேற்று நான் வானத்தில் சந்திரனை ________________________________

(e) பார்க்கிறேன்.

(f) பார்த்தேன்.

(g) பார்த்தார்கள்.

(h) பார்த்தோம்.

For questions 22 to 24 choose the word(s) that has (have) the closest meaning to the underlined word(s).
22 முதல் 24 வரை கோடிட்ட சொல்லுக்கு (சொற்களுக்கு) மிகப் பொருத்தமான சொல் (சொற்களை) தருக.

22. சந்திரனுக்கு வேறு ஒரு பெயர்.

(a) சூரியன்

(b) நிலா

(c) கதிரவன்

(d) நட்சத்திரம்

23. தம்பி **மகிழ்ச்சியாக** இருக்கிறான்.

(a) கவலையாக

(b) சந்தோஷமாக

(c) அழுகையாக

(d) விருப்பமாக

24. மல்லிகைப் பூ **அழகானது.**

(a) கறுப்பானது.

(b) மென்மையானது.

(c) வடிவானது.

(d) நல்லது.

For questions 25 to 27 give the opposites to the underlined words.
25 முதல் 27 வரை கோடிட்ட சொல்லுக்கு எதிர்ச்சொல் தருக.

25. அம்மா **<u>கேள்வி</u>** கேட்டார்.

(a) வினா

(b) பதில்

(c) கதை

(d) படம்

26. வாணி **<u>அருகில்</u>** அமர்ந்தார்.

(a) எதிரில்

(b) பக்கத்தில்

(c) தொலைவில்

(d) மேலே

27. எது **<u>இலகுவோ</u>** அதை எழுதுங்கள்.

(a) நல்லதோ

(b) விருப்பமோ

(c) கடினமோ

(d) கெட்டதோ

Read and understand the text "விளையாட்டுப்போட்டி" and answer the questions 28 to 31.
"விளையாட்டுப்போட்டி" பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 28 முதல் 31 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# எமது பாடசாலையின் விளையாட்டுப்போட்டி

எமது பாடசாலையின் விளையாட்டுப்போட்டி 28-11-2009 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

ஓட்டம், நீளம் பாய்தல், உயர பாய்தல், குண்டு எறிதல் ஆகிய போட்டிகள் நடைபெறும்.

இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் 15-11-2009 க்கு முன்பதாக தமது பெயர்களை வகுப்பாசிரியரிடம் கொடுத்தல் வேண்டும்.

போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்கள் வெள்ளை நிற உடை அணிந்து வரவேண்டும்.

போட்டிகள் யாவும் மாலை 5:00 மணிக்கு முடிவடையும்.

பின்பு வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

28. விளையாட்டுப்போட்டி எந்த மாதம் நடைபெறும்?

(a) தை
(b) ஆனி
(c) மார்கழி
(d) கார்த்திகை

29. போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் என்ன நிற உடை அணிந்து வரவேண்டும்?

(a) கறுப்பு
(b) சிவப்பு
(c) வெள்ளை
(d) நீலம்

30. விளையாட்டுப்போட்டி என்ன நாளில் நடைபெறும்?

(a) திங்கட்கிழமை
(b) சனிக்கிழமை
(c) புதன்கிழமை
(d) வெள்ளிக்கிழமை

31. போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் தமது பெயர்களை யாரிடம் கொடுத்தல் வேண்டும்?

(a) அதிபரிடம்
(b) வகுப்பு ஆசிரியரிடம்
(c) பெற்றோரிடம்
(d) நண்பர்களிடம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

For questions 32 to 34 rearrange the sentences in order.
32 முதல் 34 வரையுள்ள கேள்விகளுக்கு தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.

32. (1) வாணி கதவைத் திறந்தாள்.
(2) வாசலில் அழைப்புமணி ஒலித்தது.
(3) “வாருங்கள்” என வாணி அவர்களை வரவேற்றாள்.
(4) மாமாவும் மாமியும் அங்கே நின்றார்கள்.

(a) (1), (2), (3), (4) (b) (2), (1), (4), (3)
(c) (4), (3), (1), (2) (d) (3), (4), (1), (2)

33. (1) வீட்டிற்கு நண்பர்கள் வந்தார்கள்.
(2) பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தேன்.
(3) எல்லோருமாக இரவு உணவு உண்டோம்.
(4) சிறிது நேரம் நண்பர்களுடன் விளையாடினேன்.

(a) (2), (1), (4), (3) (b) (1), (2), (3), (4)
(c) (2), (4), (1), (3) (d) (1), (4), (3), (2)

34. (1) நானும் அக்காவும் புகையிரதத்தில் மெல்பேர்ன் சென்றோம்.
(2) பின்பு எங்களை பெரியப்பா பிலிப்தீவிற்கு அழைத்துச் சென்றார்.
(3) பெரியப்பா எங்களை புகையிரத நிலையத்தில் வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.
(4) சிறிது நேரம் ஓய்வு எடுத்த பின்பு காலை உணவு உண்டோம்.

(a) (3), (2), (4), (1) (b) (1), (3), (4), (2)
(c) (1), (2), (3), (4) (d) (4), (3), (2), (1)

Read the text  and answer the questions 35 to 37.
பின்வரும் பந்தியை வாசித்து 35 முதல் 37 வரையான வினாக்களுக்கு விடை தருக.

**என் பெயர் சுதர். நான் சிட்னியில் எனது குடும்பத்துடன் வசிக்கிறேன். நான் ஒரு தமிழன். என்னுடைய அப்பாவின் பெயர் சுந்தரம். அம்மாவின் பெயர் கண்ணம்மா. எனக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். ஒரு அக்கா, ஒரு தம்பி, ஒரு தங்கை. நாங்கள் எல்லோரும் லொலாமா (Lolama) வீதியில் 3ஆம் இலக்க வீட்டில் வசிக்கிறோம். எனது அக்கா சிட்னி பல்கலைக்கழகத்தில் படிக்கிறார். நான் பரமற்றா (Parramatta) உயர்கல்வி பாடசாலையில் படிக்கிறேன். எங்கள் வீட்டில் இரண்டு கணினிகள் உண்டு. நான் எனது அறையில் உள்ள கணினியில் விளையாடுவேன்.**

35. சுதர் வசிக்கும் நகரம் எது?
- (a) கொழும்பு
- (b) சிட்னி
- (c) மெல்பன்
- (d) கன்பரா

36. சுதரின் அக்கா எந்த பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்?
- (a) யாழ்ப்பாணம்
- (b) மட்டக்களப்பு
- (c) சிட்னி
- (d) பரமற்றா

37. சுதரின் வீட்டில் எத்தனை கணினிகள் உண்டு?
- (a) ஐந்து
- (b) மூன்று
- (c) ஒன்பது
- (d) இரண்டு

For questions 38 to 40 on "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" choose the right answer.

38 முதல் 40 வரையுள்ள "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற கொன்றை வேந்தன் பற்றிய வினாக்களுக்கு மிகவும் சரியான பதிலைத் தெரிவு செய்க.

| |
|---|
| **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்** |

38. "**அன்னை**" என்ற சொல்லைக் குறிக்கும் இன்னோர் சொல் எது?

(a) அப்பா
(b) அம்மா
(c) அப்பம்மா
(d) அம்மப்பா

39. பின்வரும் சொற்களில் எது "**தெய்வம்**" என்ற சொல்லைக் குறிப்பிட **மாட்டாது**?

(a) கடவுள்
(b) ஆண்டவன்
(c) இறைவன்
(d) மாமா

40. இதன் கருத்து

(a) அன்னையும் பிதாவும் நல்லவர்கள்.
(b) அன்னையும் பிதாவும் நமக்கு தெய்வத்தைப் போன்றவர்கள்.
(c) அன்னையும் பிதாவும் எமக்கு உணவு தருவார்கள்.
(d) அன்னையும் பிதாவும் நமக்கு உதவி செய்பவர்கள்.